03.11.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஷ் | | |
| த/பெ | தர்மலிங்கம் | மதம் | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | /2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மூட்டை தூக்கும் லோடு மேன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் காவலராக பணி செய்து வருகிறார்கள். சுமார் 8 அல்லது 9 வருடங்களுக்கு முன்பு நான் ஊருக்கு செல்வதற்காக ரயில்நிலையம் சென்றேன். அப்போது நான் ரயில் விசாரிக்க சென்றபோது என்னிடம் திருகுமரன் சாரும், கூட இருவரும் கையெழுத்து வாங்கினார்கள். நான் எதற்காக கையெழுத்து வாங்குகிறிர்கள் என்று கேட்டேன். அவர் திருட்டுபோனது சம்மந்தமாக விசாரித்துக்கொண்டு இருக்கிறோம். எனவே அதற்காக வரைபடத்தில் கையெழுத்து செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அன்று மாலை மற்றும் ஒரு வரைபடத்தை கொண்டு வந்து அதிலும் கையெழுத்து போடு என்று கேட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை திருச்சியில் இருந்து வந்த உயர் அதிகாரிகள் விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுகக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

நான் கடந்த 2006ம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் லாரி லோடுமேன் சுமை

தூக்குவோர் சங்கத்தின் உறுப்பினராக நானும், இந்த வழக்கின் 5ம் எதிரி ஸ்ரீநாத் என்பவரும் இருந்தோம் என்றும், பிறகு ஸ்ரீநாத் என்பவருக்கு போலீசில் வேலை கிடைத்தது காரணமாக நாங்கள் அடிக்கடி சந்திப்பதுஇல்லை என்றும், அவர் விழுப்புரம் ரயில்வே காவல்நிலையத்தில் போலீஸ் வேலை செய்து வந்ததாக சொன்னார் என்றும், அவர் பணி இல்லாத நாளில் என்னை சந்தித்து பேசுவது வழக்கம் என்றும், கடந்த 2016ம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் மாலை நேரத்தில் 5ம் எதிரி ஸ்ரீநாத் என்னை நேரில் சந்தித்து காவல்நிலையத்தில் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது என்றும், திருட்டு வழக்கில் ரயில்வே ஸ்டேசனில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை 2 நாள் காவல்நிலையத்தில் வைத்து விசாரிக்க போலீஸ் விசாரணையின் போது அடித்ததில் அவர் இறந்துவிட்டார் என்றும், அதனால் எனக்கு வேலை போய்விட்டது என்றும், நீ தான் எனக்கு உதவி செய்யவேண்டும் என்று அவர் என்னை கேட்டதாகவும், என்னுடன் மற்றொருவரை கூப்பிட்டு வா என்று கேட்டதில் நான் வல்லரசு என்பவரை அழைத்து சென்றதாகவும், அங்கிருந்து காவல் துறையினர் என்னை கூப்பிட்டு வெள்ளை தாளில் என்னிடம் ஏதோ எழுதி இருந்ததில் கார்பன் பேப்பர் வைத்து என்னிடமும், நான் அழைத்து சென்ற வல்லரசு என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், 7.5.2016 மாலை 5 மணியளவில் நான் நின்றுகொண்டிருந்தபோது அங்கு ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து டிக்கெட் வாங்கும் இடத்தை காண்பித்து இங்கு தான் ஜெயவேல் என்ற நபர் பிக்பாக்கெட் அடித்ததாகவும், அங்கிருந்து ஓடி கீழே விழுந்து எழுந்து ஓடி அடித்து பிடித்து கொடுத்ததாகவும், நானும் வல்லரசும் சாட்சியாக இருக்க முன் வந்ததாகவும், என் முன்னிலையில் படம் வரைந்து எழுதியதாகவும், சொல்லவேண்டும் என்று ரயில்வே போலீசார் சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தார் என்றும், நானும் என்னுடைய நண்பர் ஸ்ரீநாத் என்பவருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில், அதன் பிறகு என்னை விசாரித்த அனைவரிடமும் அதையே சொன்னேன் என்றும், நீதிபதி என்னை விசாரித்தபோதும், பிறகு ரயில்வே போலீசார் என்னை விசாரித்தபோதும் நான் அதையே சொன்னேன் என்றும், ஆனால் தற்போது நானும் ஸ்ரீநாத் எனது நண்பர் என்று தெரிந்து 24.7.2015 வேலூர் சிபிசிஐடி ஆகியோர் விசாரித்தபோது பொய்யான வாக்குமூலம் அளிக்க வேண்டாம் என்று

முடிவு செய்து, எனக்கு தெரிந்த விபரங்களை அவர்களிடம் சொன்னேன் என்றும், நான் என் வாழ்க்கையில் ஒரே முறைதான் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு திருப்பதி சென்றேன் என்றும், தற்போது தீருப்பதிக்கு செல்ல வேண்டும் என்று எந்தவொரு முடிவும் எடுக்கவீல்லை என்றும், நான் திருப்பதிக்கு செல்ல ரயில்வே நிலையத்திற்கு வரவில்லை என்றும், என்னுடைய நண்பர் ஸ்ரீநாத் கேட்டதின்பேரில் எனக்கு சொல்லிக்கொடுத்ததால் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நான் ஏற்கனவே ஒரு பொய்யான வாக்குமூலத்தை கொடுத்தேன் என்றும், விழுப்புரம் ரயில்வே போலீசார் எங்கள் முன்னிலையில் எந்த இடத்தையும் பார்க்கவில்லை என்றும், எழுதவில்லை என்றும், படமும் வரையவில்லை என்றும், ஜெயவேல் என்ற ஒரு நபர் ரயில்வே போலீசார் ஸ்டேசனில் வைத்திருந்தவர் இறந்துவிட்டார் என்ற தகவல் ஸ்ரீநாத் போலீஸ் மூலமாக தான் பேப்பர் பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றும், என்னுடைய நண்பர் )ஸ்ரீநாத் என்பவருக்கு பிரச்சனை எதுவும் வந்துவிடக்கூடாது என்பதால் தான் அப்போது இருந்த காவல்ஆய்வாளர் சொல்லிக்கொடுத்ததாகவும், அவ்வாறு ஒரு பொய்யான தகவலை சொன்னேன் என்றும், நான் என்னை வேலூர் சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும்போது இந்த தகவல்களை சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>**இல்லை